S. Natarajah
Publisher

விலை சதம் 5

பக்கங்கள் 4

உங்கள் தேவைக்கான
சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள் பால் உணவுகள், டின் ஆகார வகைகள் இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.
கே. எம்.
அரிசிமீயாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, நட்டார்த் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

மலர் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு கார்த்திகை 11 புதன்கிழமை | Colombo November 26 1947 | ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 12 | இதழ் 176

கவர்னரின் பாராளுமன்றத் திறப்பு விழாப் பிரசங்கம்

புதிய அந்தஸ்து அமுலுக்கு வரும் தேதி சீக்கிரம் தெரிவிக்கப்படும்

இந்தியாவுடன் உடனடியாக சமரசப்பேச்சு ஆரம்பம்

சிறிய ராணுவம்; உணவு உற்பத்திப் பெருக்கம்; உணவுக் கட்டுப்பாடு

அரசாங்கம் சாதிக்கப்போகும் கொள்கைகளும் புதிய மசோதாக்களும்

கொழும்பு, நவ. 26

நேற்று கவர்னர் இலங்கை பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் இலங்கைக்குப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குட்பட்ட பூரண பொறுப்பாட்சி வழங்கும் தேதி கூடியசீக்கிரம் குறிப்பிடப்படும் என்று தெரிவித்தார்.

இலங்கை புதிய அந்தஸ்தை அடைந்ததும் வெளிநாடுகளுடன் உறவு ஏற்படுத்திக்கொள்ள அந்நிய தேசங்களில் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கவேண்டியிருக்குமென்றும் இந்திய-இலங்கைப் பிரச்னைகளைத் தீர்க்க கூடியசீக்கிரம் சமரசப்பேச்சுகள் ஆரம்பிக்கப்படுமென்றும் கூறினார்.

புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றியும் அவைகளை அனுஷ்டிக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் அரசாங்க மசோதாக்கள் பற்றியும் கவர்னர் எடுத்துரைத்தார். கவர்னர் பிரசங்கத்தின் முழு விபரம் பின்வருமாறு:-

கவர்னர் பிரசங்கம்

சரித்திரத்திலிடம்பெறும் இன்றைய தினம் நாம் இங்கு கூடியிருக்கிறோம். இலங்கையின் புதிய பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தில் நான் உங்கள் முன்பு பேச சந்தர்ப்பம் வாய்த்தது எனது அதிர்ஷ்டமே. சென்ற மாத காலத்தில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சென்ற தடவை இவ்வருடம் ஜூன் மாதம் 18ம் தேதி நான் அரசாங்க சபையில் பேசிய போது, இலங்கை சர்க்காருக்கும் பிரிட்டிஷ் சர்க்காருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒப்பந்தப் பேச்சுக்கள் முடிவுற்றதும் இலங்கைக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் பூரண பொறுப்பாட்சி வழங்க நடவடிக்கை எடுக்கக் கொள்ளப்படுமென்று தெரிவித்தேன்.

கூடிய சீக்கிரம் தேதி குறிப்பிடப்படும்

இம்மாதம் 13 14-ம் தேதிகளில் இலங்கை சர்க்கார் வெளியிட்ட இரு அறிக்கைகள் உங்களுக்குத் தெரியும். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை சுதந்திர மசோதா, இலங்கை அரசியல் திட்ட சம்பந்தமான சட்டம் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் இவைகள் அறிக்கைகளாக வெளியிடப்பட்டன. கூடிய சீக்கிரம் இந்த மசோதா இலங்கை சுதந்திரச் சட்டமாக பிரிட்டிஷ் பாராளுமன்றச் சட்டதொகுதியில் சேர்ந்துவிடும். இந்தப் புதிய அந்தஸ்து இலங்கைக்கு வழங்கப்பட்டிருப்பது குறித்து நான் அதிகமாகப் பேசவிருப்பமில்லை. இந்த அறிக்கைகளை ஆராய்ந்து பார்த்தோமேயானால், குறிப்பிட்ட தேதியில் [இந்த தேதி கூடிய சீக்கிரம் குறிப்பிடப்படுமென்று நம்புகிறேன்] இலங்கை மற்ற டொமினியன்களைப் போல பூரணமான உரிமைகளையும் மதிப்பையும் சுதந்திரத்தையும் அடையுமென்பதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுடன் இலங்கை சுதந்திரமும் சுயேச்சையுமான ஸ்தானத்தை வகிக்குமென்பதையும் தெரிந்துகொள்ளலாம். இலங்கையானது சச்சரவோ ரத்தப் புரட்சியோ இன்றி சமரசப் பேச்சுகள் மூலமாக சுதந்திரத்தின் எல்லையை அடைந்திருப்பது மிகவும் திருப்தியளிக்கக்கூடிய விஷயமாகும்.

பாராட்டுத் தீர்மானம்

இலங்கை சுதந்திரம் அடைந்ததை பாராட்டி பாராளுமன்றத்தின் இரு சபைகளிலும், ஒரு தீர்மானம் கொண்டுவர எனது அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

வரவு செலவுத் திட்டம்

1948வது வருடம் செப்டம்பர் 30-ம் தேதி வரை முடிவுறும் நிதி வருட உத்தேச வரவு செலவுத் திட்டம் இந்தக் கூட்டத்திலேயே கூடிய சீக்கிரம் சமர்ப்பிக்கப்படும். சாதாரணமாக வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் சமயத்தில் இலங்கையின் அரசியல் திட்டம் மாறும் காலமாயிருந்து வந்ததால் 1948 ஜனவரி 31-ம் தேதி முடிய குறிப்பிட்ட 4 மாத கால அளவிற்கு வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் பின் சமர்ப்பிக்கப்படும் புதிய வரவு செலவுத் திட்டம் இந்த குறுகிய காலத் திட்டம் உட்பட ஓர் வருட கால அளவுக்குத் தயாரிக்கப்பட்டதாக இருக்கும். எனது மந்திரிகள் எனது அரசாங்கத்தின் பல்வேறு துறைகளிலும் அனுஷ்டிக்கும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விவரமான திட்டங்கள் அமைப்பதற்குப் போதிய காலமில்லாத படியால் சில விஷயங்களில் பழைய அரசாங்கத்தின் நடைமுறைகளைப் பின்பற்றியே இந்தப் புதிய வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கும்.

நிதிசம்பந்தமாக மட்டும், அதிகப்படியான வரிகளைப் பற்றியும், கட்டுப்பாடின்றி தாராளமாக நடைபெற்று வரும் இறக்குமதியைப் பற்றியும் நீங்கள் நாளடைவில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியிருக்கும்.

வெளிநாட்டு விவகாரம்

வெளிநாட்டு விவகாரங்கள் சம்பந்தமாக, இலங்கை டொமினியன் அந்தஸ்தை அடைந்ததும் இதர சுதந்திர நாடுகளுடன் புதிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதாக இருக்கும். சாம்ராஜ்ய நாடுகளுடன் நேசபான்மையான உறவு ஏற்படுத்திக் கொண்டு இதர நாடுகளுடன் ஒற்றுமையாக வாழ வேண்டுமென்றே எனது அரசாங்கம் முயற்சி செய்யும். இலங்கைக்குப் புதிய உரிமைகளும் பொறுப்புகளும் ஏற்படுவதால் வெளிநாடுகளில் இலங்கை அதிகப்படியாக தனது பிரதிநிதிகளை வெளிநாடுகளில் நியமிக்க வேண்டியதிருக்கும். அப்படி உலகிலுள்ள முக்கியமான தேசங்களில் இலங்கையின் பிரதிநிதிகளை நியமிப்பது பற்றி எனது அரசாங்கம் கவனத்தைச் செலுத்தும்.

இந்தியா இலங்கை பிரச்னைகள்

இலங்கைக்கு அருகேயுள்ள நாடான இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளும் உறவு சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டு மந்திரி முதலாவதான நடவடிக்கை எடுத்துக்கொள்வார்.

இந்திய-இலங்கை உறவுகள் சம்பந்தமான பிரச்னைகளை இரு நாடுகளுக்கும் திருப்தியளிக்கக்கூடிய முறையில் துரிதமாகத் தீர்த்து வைக்க வெளிநாட்டு மந்திரி இந்திய அரசாங்கத்துடன் சமரசப் பேச்சுகளை ஆரம்பிப்பார்.

தேசப் பாதுகாப்பு

தேசப் பாதுகாப்பு சம்பந்தமாக முதலாவது சிறிய அளவில் நிரந்தரமான தரைப்படை, கடற்படை, ஆகாயப்படைகளடங்கிய ராணுவத்தை நிறுவுவது பற்றியும் பயிற்சிபெற்ற தொண்டர் படைகளை நிர்வகிப்பது பற்றியும் பின்னர் தேவைக்குத் தக்கபடி ராணுவத்தை விஸ்தரிப்பது பற்றியும் எனது அரசாங்கம் தீவிரமான கவனம் செலுத்தி வருகிறது.

நிதி

நிதி சம்பந்தமாக குடியேற்ற நாடாக இருந்த இலங்கை சுதந்திர நாடாக மாறுவதால் குடியேற்ற நாட்டுப் பொருளாதார அமைப்பை சுதந்திர நாட்டுத் தேசியப் பொருளாதார அமைப்பாக மாற்றுவதற்கு நிபுணர்களிடம் ஆலோசனை கேட்க எனது அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

சுபிட்சத் திட்டம்

இலங்கை மக்களின் எதிர்கால சுபிட்ச நிலைமையானது நாட்டின் மூலப்பொருட்களின் பக்குவமான அபிவிருத்தியைப் பொறுத்திருக்கிற தென்பதை எனது அரசாங்கம் உணர்கிறது. அது சம்பந்தமாக எனது அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் முதலாவது நடவடிக்கை திட்டங்கள் வகுப்பதாகும். அதன்படி நாட்டிற்கு அதிக பட்சமான நலன் பயக்கக்கூடிய வகையில், சரியான வழியில் இப்பிரச்னையைத் தீர்த்து வைக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

தேவை

நாட்டில் உற்பத்தியை, முக்கியமாக உள்நாட்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக அனுஷ்டிக்க வேண்டிய கொள்கையை எனது அரசாங்கம் வகுக்கும் முதலாவது கட்டமாகும். உலகெங்கும் உணவுப் பொருட்களுக்காக ஏற்பட்டிருக்கும் தேவையைக் கவனிப்பின், இலங்கையில் உணவு உற்பத்தியை முக்கியமாக நெல், விளைவைப் பெருக்குவதில் அரசாங்கம் தன் கொள்கையில் முழு கவனத்தைச் செலுத்த வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆதலால் இது விஷயத்தில் எனது அரசாங்கம் இருவித நோக்கங்களுடன் ஒரு திட்டத்தை அமுல் செய்ய உத்தேசித்திருக்கிறது. நீர்ப்பாசன வசதியிருந்தும் இதுவரை சாகுபடியாகாத நிலங்களை சாகுபடிக்குட்படுத்துவதும், ஏற்கனவே சாகுபடியாகும் நிலங்களில் விளைச்சலை அதிகரிப்பதுவுமே இருவித நோக்கங்களாகும்.

மீன்

இதே உணவு உற்பத்திப் பெருக்கக் கொள்கையை முன்னிட்டே, எனது அரசாங்கம் மீன் பிடிக்கும் கைத்தொழிலை சீர்திருத்தி அமைக்கவும் உத்தேசித்திருக்கிறது. அது சம்பந்தமாக தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

உணவுக் கட்டுப்பாடு

உணவுக் கட்டுப்பாட்டை தளர்த்த முடியாது. முக்கிய உணவுப் பொருட்களை அரசாங்கமே தொடர்ந்து இறக்குமதி செய்து விநியோகம் செய்யும். யுத்தம் முடிந்த பின்னும் சமீப காலத்திற்குள் உணவுத் தேவை பூர்த்தியாகுமென்ற நம்பிக்கை இல்லை. அதற்குப் பதிலாக புதிய தொல்லைகளும் ஏற்பட்டுள்ளன. உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் மா, சீனி, அரிசி முதலிய உணவுப் பொருட்களுக்கு விதிக்கும் விலை வாசிகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இப்பொழுது அவ்விலை உயர்வு உச்ச நிலையை அடைந்துவிட்டது. இதனால் ஏற்பட்டுள்ள நிதிப் பிரச்னைகளை தீர்ப்பது பற்றியும் எனது அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

கைத்தொழில் அபிவிருத்தி

கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக, இப்பொழுதுள்ள அரசாங்க தொழிற்சாலைகளை நவீன முறையில் விஸ்தரிக்க எனது அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. புதிய கைத்தொழில் திட்டங்களை அமுல் செய்வது சம்பந்தமாகவும் எனது அரசாங்கம் தீவிர ஆலோசனை செய்து வருகிறது.

கிராமாபிவிருத்தி

உள்நாட்டு மந்திரி நிர்வாகத்திற்குட்பட்ட கிராமாபிவிருத்தி இலாகா வொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன் வேலைகள் கிராம மக்களின் பொருளாதார சுபிட்சத்திற்கு பெரிதும் உதவியாக இருக்கும். அதே மந்திரி நிர்வாகத்திற்குட்பட்ட தகவல் இலாகா வொன்றும் ஏற்படுத்தப்படுகிறது.

இந்த ஏற்பாடு வெகுநாளைய தேவையைப் பூர்த்தி செய்யும். யுத்தகாலத்தில் கூட்டுறவு இயக்கம் பெரிதும் அபிவிருத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் திறப்பு விழாக் காட்சி

'யூனியன் ஜாக்'கும் அதற்குக்கீழே சிங்கக் கொடியும் பறந்தன

ராணுவ அணிவகுப்பு; கவர்னர் பவனி; நீதிபதிகளை தொடர்ந்து செனட்டர்கள் ஊர்வலம்

போல்ஷ்விக் லெனினிஸ்ட் கட்சி அங்கத்தினர்கள் பகிஷ்காரம்

கொழும்பு, நவ. 26

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தை கவர்னர் ஸர். ஹென்றி மாங்க்-மேசன் மூர் காலை 10 மணிக்கு திறந்துவைத்தார்.

கவர்னர் பிரசங்கத்தைக் கேட்க பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் பிரதிநிதிகள் சபை அங்கத்தினர்களும் செனட் சபை அங்கத்தினர்களும் உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்து வந்த பல பிரமுகர்களும் கூடியிருந்தனர்.

மண்டபம் நிறைந்திருந்தது. லேடி மூர், சிங்கப்பூரிலிருந்து வந்திருக்கும் கிழக்கு ஆசியா பிரிட்டிஷ் கடற்படை, தரைப்படை, விமானப்படைத் தளபதிகள், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், அரசாங்க உயர்தர அதிகாரிகள் மற்றும் கொழும்பு நகர்ப் பிரமுகர்கள் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

மண்டபத்திற்குள் மற்றும் ஏராளமான ஜனங்களும் நிரம்பியிருந்தார்கள். மண்டபத்திற்குள் நுழைய அனுமதி கிடையாத ஜனங்கள் வெளியே கூடி நின்றனர். ஆனால் ஒன்று குறிப்பிடவேண்டியிருக்கிறது. பொதுவாக காலிபேஸில் ஒரு கூட்டத்திற்கு வரும் ஜனத்தொகையளவுகூட திறப்பு விழாவைப் பார்ப்பதற்கு வந்ததாகத் தோற்றவில்லை.

அலங்கரிக்கப்பட்ட ராணி வீதி வழியாக கவர்னர் மண்டபத்திற்கு காரில் வந்தார். வரும்போது வீதியின் இரு பாரிசங்களில் கூடி நின்ற ஜனங்கள் வழி நெடுக ஆர்ப்பரித்தனர்.

மண்டபத்துக்குள் போதிய அளவு இடமில்லாதபடியால் பத்திரிகா நிருபர்கள் உட்கார ஆசனங்களின்றி நின்றுகொண்டிருந்தார்கள்.

கவர்னர் மண்டபத்திற்கு வரும் வழி நெடுக பிரிட்டிஷ் கடற்படை வீரர்களும் இலங்கை தொண்டர் கடற்படை வீரர்களும், ராணுவ வீரர்களும், பிரிட்டிஷ் விமானப்படை வீரர்களும் அணிவகுத்து நின்றனர்.

சர்க்கார் மாளிகைகளில் அநேக கொடிகள் பறந்துகொண்டிருந்தன. யூனியன் ஜாக் கொடி வானளாவிப் பறக்க அதற்குக் கீழாக சிங்கக் கொடியும் பறந்துகொண்டிருந்தது.

பிரதிநிதிகள் சபை மண்டப வாசல்களில் போலிஸ் அதிகாரிகள் பாதுகாவல் செய்தனர்.

மண்டபத்திற்குள் வருவோர்களை அவரவர் ஆசனங்களில் அமரும்படி சார்ஜண்ட் ஒழுங்கு செய்துகொண்டிருந்தார்.

பிரதிநிதிகள் தங்கள் மனைவிகளுடனும் நண்பர்களுடனும் முன்னதாகவே 9-45 மணிக்கு வந்துவிட்டனர். மோட்டார் சைக்கிளில் போலிஸ் அதிகாரி முன்னேயும் அவருக்குப் பின்னால் 10 சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் கார்களிலும் அவர்களுக்குப் பின்னால் செனட் சபைத் தலைவர் தலைமையில் 30 செனட் அங்கத்தினர்களும் ஊர்வலமாக வந்து சேர்ந்தனர். அவர்கள் மண்டபத்திற்குள் நுழையவும் எல்லோரும் எழுந்து நின்று மரியாதையுடன் வரவேற்றனர்.

பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகா தனது மனைவியாருடன் வரும்போது வெளியில் நின்றுகொண்டிருந்த ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள்.

இந்தக் காட்சிகளையெல்லாம் காமிராக்காரர் படம்பிடித்துக் கொண்டிருந்தனர். சம்பவங்களெல்லாம் கவர்னர் மண்டபத்திற்குள் பிரவேசிக்கும் வரை ரேடியோமூலம் ஒலிபரப்பப்பட்டு வந்தன.

17 மரியாதைக் குண்டுகள் சப்திக்க கவர்னர் மண்டபத்திற்குள் வரவேற்கப்பட்டார். பிரிட்டிஷ் கடற்படை பாண்டு வாத்திய கோஷ்டி பிரிட்டிஷ் தேசியகீதத்தை முழக்கியது.

கட்டிடத்தில் பறந்துகொண்டிருந்த யூனியன் ஜாக், சிங்கக் கொடிகளுடன் சோவியத் ரஷியாவின் கொடியும் இருந்தது.

பாராளுமன்ற விதிதர்கள் மண்டப வாசற்படியில் கவர்னரை வரவேற்றனர்.

கவர்னர் வருகையை சார்ஜண்ட் அறிவித்தார். பாராளுமன்றம் கூடுவதாகப் பிரகடனம் செய்யப்பட்டபிறகு வலது பக்கத்தில் மந்திரிகளுடன் வீற்றிருந்த பிரதம மந்திரி எழுந்து முன்வந்து கவர்னர் வாசிக்கும் பிரசங்கத்தை கவர்னர் கையில் கொடுத்தார். கவர்னர் அப்பிரசங்கத்தை வாசித்து பாராளுமன்றத்தை திறந்து வைத்தார்.

கவர்னர் திறப்புவிழாவுக்கென அமைக்கப்பட்ட உயர்ந்த பீடத்திலுள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அப்பீடத்திற்கு இரு புறங்களிலும் மந்திரிகள் அமர்ந்திருந்தனர். பீடத்திற்கு முன்பாக பிரதிநிதிகள் சபைத் தலைவரும் செனட் சபைத்தலைவரும் அமர்ந்திருந்தனர்.

கவர்னர் 10 நிமிட நேரத்தில் பிரசங்கத்தை வாசித்து முடித்ததும் இரு சபைகளும் பிற்பகல் கூடுவதற்கு ஒத்திவைக்கப்பட்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

பிரதிநிதிகள் சபைக் கூட்டம்

சங்குச் சட்ட விதிகள் சமர்ப்பணம்

கவர்னர் பிரசங்கத்தின் மீது விவாதம்

கொழும்பு, நவ 26

இலங்கைப் பிரதிநிதிகள் சபை நேற்று பிற்பகல் 2 மணிக்கு சபாநாயகர் திரு ஏ. எவ். மொலமூரே தலைமையில் கூடியது. சபையின் கிளெர்க்கிடமிருந்து வந்த ஒரு கடிதத்தை சபாநாயகர் வாசித்தார். சபாநாயகர், உதவி சபாநாயகர் முதலியோர் தெரிவுக்கு உபயோகிக்கப்பட்ட வாக்குச் சீட்டுகள் சபைச் சட்டப்படி எரிக்கப்பட்டுவிட்டனவென்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கைத்தொழில், கைத்தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி இலாகா மந்திரி திரு. ஜி. ஜீ. டி சில்வா சங்குச் சட்டத்தின் கீழ் கொண்டுவந்த சட்டத்தில், பிரஸ்தாப சங்குச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குள் வயது முதிராத சங்குகளைக் குளிக்கவோ அவற்றைச் சேகரிக்கவோ படாதென்றும் அவ்விதம் எடுக்கப்படும் சிறிய சங்குகள் உயிருடன் இருப்பின் கடலில் விட்டுவிடவேண்டுமென்றும் இறந்துவிட்டால் சமீபத்தில் இருக்கும் மீன்பிடி இலாகா இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைக்கப்பட்டுவிடவேண்டுமென்றும் தெரிவித்தார்.

அரசாங்கக் கட்சித் தலைவர் திரு எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயகா பேசுகையில் சபை திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமைவரை பிற்பகல் 2 மணிக்கு தினசரி கூடுமென்றும் இரவு 10-மணி வரை சபை நடக்குமென்றும் கவர்னரின் பிரசங்கத்தின் மீது நடக்கும் விவாதத்துக்கு அதிக முக்கியமாக இருக்கிறதென்றும் கிறிஸ்மஸ் விடுமுறைக்குமுன் (பட்ஜெட்) வரவுசெலவுத் திட்டம்பற்றி விவாதிக்க போதிய நேரம் கிடைக்கக்கூடியதாகப்

[4-ம் பக்கம் பார்க்க]

உங்கள் இடங்களின்
மங்கள சூரியன்
மெய்கண்டான்
திருக்குறட் கலண்டர்
அறிஞர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்று விளங்கும் 1948-ம் வருடத்து மங்களகரமான மெய்கண்டான் திருக்குறட் கலண்டர் உங்கள் இடங்களில் மங்களகரமாக விளங்கத் தகுந்தது. எங்கும் கிடைக்கும்.
பிந்தினால் கிடைப்பதரிது!
10X15 அழகிய படத்துடன் விலை ரூ 1-75
7X11 படத்துடன் முதுமொழிக் கலண்டர் „ 0-85
No 1 டயறி ரூ. 1-50
No. 2 டயறி ரூ. 0-85
மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி P. O.
மெய்கண்டான்
அச்சியந்திரசாலை,
79, பாபர் ஸ்டிரீட், கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3611

சர்வஜித்து ஞு கார்த்திகை மீ 11உ
புதன்கிழமை

சுதந்திரமா? இராணுவ ஆக்கிரமிப்பா?

பிரிட்டிஷார் தோலிருக்கச் சுளை விழுங்குபவர்கள். இலங்கைக்கு சுயராஜ்ய நாடுகளுக்கு உட்பட்ட பொறுப்பாட்சி கொடுப்பதாக வாக்களித்தார்கள். பின்பு பொறுப்பாட்சிதான் டொமினியன் அந்தஸ்து என்றார்கள். இறுதியில் சென்ற வாரம் அதற்கு இலங்கைச் சுதந்திர மசோதா என்றும் பெயரிட்டார்கள். சென்ற ஜுலை மாதம் தொடக்கம் இன்று வரைக்கும் நாம் இப்பத்திகளில் இது பொறுப்பாட்சியுமல்ல டொமினியன் அந்தஸ்துமல்ல சுதந்திரமுமல்ல, போலி அந்தஸ்துதான் என்று பல தடவைகளிலும் சொல்லி வந்திருக்கிறோம். யூ. என். பியைத் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகளும் இது போலி அந்தஸ்து என்றே சொல்லி வந்தார்கள். ஆனால் யூ. என். பி. கட்சியினரும் திரு. டி. எஸ். சேனநாயக்காவும் கூடடன், இராச விசு விழிக்க எத்தனித்தது போல கருமங்கள் ஆற்றத் தலைப்பட்டனர். சுதந்திரத்தைக் கொண்டு வருவதாகவும் கூச்சலிட்டார்கள்.

உண்மையில் இலங்கை பெறுவது போலி அந்தஸ்து என்பதை பிரிட்டிஷார் இன்று முழு தினம் நிரூபித்து விட்டார்கள். இலங்கையின் பாராளுமன்றத் திறப்பு விழா வைபவத்தைக் காண்பதற்காக பிரிட்டிஷ் கப்பற்படை, இராணுவப், விமானப்படை ஆகிய மூன்று படைகளின் தலைவர்களும் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் திறப்புவிழாவைப் பார்த்ததும் லண்டன் திரும்பி விடுவார்கள் என்று பலர் எண்ணக்கூடும். அப்படியில்லை. இந்த மூன்று பிரிட்டிஷ் பெரியாரும் இங்கிருந்து இலங்கையைப் பாதுகாப்பதெப்படி என்பதைப்பற்றி மகாநாடு நடத்துவார்களாம். ஆகலின் அவர்கள் இங்கு சமுகமளித்திருப்பது பலம் பொருந்திய பிரிட்டிஷ் இராணுவத்தை இங்கு நிலைநாட்டுவதற்கான வழி வகைகளை ஆலோசிக்கத்தான் என்பது வெளிப்படை.

சுதந்திரம் வந்துவிட்டதென்று தம்பட்டம் அடித்தவர்களுக்கு இது தக்க பதிலாகும். ஒரு குடியேற்ற நாட்டுக்கும் எங்கள் இலங்கை டொமினியனுக்கும் என்ன வித்தியாசம் உண்டு என்று நாம் கேட்கிறோம். சுதந்திரபாதை மிகவும் நீண்டது. அதைத் தன்னலமற்ற தியாகத்தால் அடையலாமேயன்றி, இன்னொருவரால் வழங்க முடியாது. மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, ஆசாத் போன்ற எத்தனை தலைவர்கள் இங்கு இருக்கிறார்கள்? தேச நன்மைக்கு என்ன செய்திருக்கிறார்கள்? எல்லாம் பூஜ்யம்தான்.

நியூ ஒலிம்பியா தியேட்டரில் ரூபாய் 9200 களவு

எதிரிக்கு 18 மாதச் சிறை

கொழும்பு நவ 25

கொழும்பு நியூ ஒலிம்பியா தியேட்டருக்குச் சொந்தமான ரூ 9200 திருடியதாக அதே தியேட்டரில் உள்ள குடிவகை விற்கும் பகுதியைச் சேர்ந்த பி. பீ. டொன் பீரிஸ் அப்புஹாமி (குடிவகை கடை தலைவர்), எச். என். பொடிசிங்கோ (குடிவகை கடை உதவி தலைவர்) ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு டிஸ்டிரிக்ட் நீதிபதி திரு. வி. ஈ. ராஜசூரியர் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் எச். என். பொடிசிங்கோ குற்றவாளியாகக் காணப்பட்டதால் நீதிபதி எதிரிக்கு 18 மாதச் சிறைத் தண்டனை விதித்தார். பி. பீ. டொன் பீரிஸ் அப்புஹாமி விடுதலை செய்யப்பட்டார்.

பிரிட்டிஷ் கணவர்களும் ரஷிய மனைவிகளும்

பிரித்து வைப்பது மனித உரிமைக்குப் பங்கம்

சோவியத் அந்நியநாட்டு மந்திரிக்கு மனு

லண்டன், நவ 24

ரஷியப் பெண்களைக் கலியாணம் செய்த 12 பிரிட்டிஷார் சோவியத் அரசாங்கத்தின் தடையுத்தரவால் தங்கள் மனைவிகளையும் குழந்தைகளையும் ரஷியாவில் விட்டுவிட்டு பிரிட்டனில் தனித்து வாழவேண்டியவர்களாக இருக்கிறது. இவ்விதம் செய்வது மனித உரிமைக்குப் பங்கம் விளைவிப்பதாகுமென்று தெரிவித்து இக்குறையை நிவர்த்திக்கும்படி வேண்டி 12 பிரிட்டிஷ் கணவர்களும், இப்பொழுது லண்டன் வந்திருக்கும் சோவியத் அந்நியநாட்டு மந்திரிக்கு ஒரு மனுவைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

2000 துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து அவர்கள் தங்கள் முறையீட்டுக்கு ஆதரவாக பிரமுகர்களிடமிருந்து அம்மனுவில் கைச்சாத்து வாங்கினர். பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் 640 அங்கத்தினர்களும் லார்டு சபையின் 150 அங்கத்தினர்களும் அம்மனுவில் கைச்சாத்துப் போடும்படி வேண்டிக்கொண்டனர். (ராய்ட்டர்)

கழனி தேர்தல் ஆட்சேபனை மனு

மூன்று நீதிபதிகள் முன் பூர்வாங்க விசாரணை

கொழும்பு, நவ 25

களனி தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் தேர்தலை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபமனுவின் மீது அப்பகுதி அங்கத்தவரால் கொண்டுவரப்பட்ட ஆட்சேபனை சம்பந்தமாக நேற்று நீதிபதி ஸர் பிரான்ஸிஸ் சூட்ஸ், நீதிபதி திரு கனகரத்னம், நீதிபதி திரு. நாகலிங்கம் ஆகியவர்கள் முன் பூர்வாங்க விசாரணை நடைபெற்றது.

இத்தொகுதி அங்கத்தவர் திரு ஜே ஆர். ஜயவர்த்தனமீது கொண்டுவந்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு மனுதாரர் ரூ 5000 ஜாமீன் கட்டியுள்ளார். இதில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மனுதாரர் கட்டியுள்ள ஜாமீன் தொகை போதியதல்லவென்று ஆட்சேபித்துள்ளார். அதோடு ஜாமீன் பணம் கட்டப்பட்டது சரியாக இல்லாததால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

இரு கட்சி வக்கீல்களும் தங்கள் தங்கள் கட்சிகளுக்காக பேசினார்கள். எதிரி தரப்பு வக்கீல் பேசுகையில் இங்கு மூன்று குற்றச் சாட்டுகளுக்கு மேலதிகமாக இருப்பதாகவும், கட்டப்பட்ட ஜாமீன் பணம் போதியதல்லவென்றும் குறிப்பிட்டார். தொடர்ந்து விசாரணை நடைபெறும்.

ரூ. 2500 சம்பந்தமாக ஏமாற்றியதாக வழக்கு

எதிரிக்கு ரூ. 500 பிணை

கொழும்பு, நவ 25

கோட்டை ஓய். எம். ஸி. ஏ-யைச் சேர்ந்த திரு. எஸ். சோமசுந்தரம் என்பவர் ரூ 2500 சம்பந்தமாக தலுகமா வதுள்ள டி. எச். டயஸ் என்பவரை ஏமாற்றியதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிபதி எதிரியை ரூ. 500 பிணையில் போக விடுத்து வழக்கை டிஸம்பர் 1-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

அச்சுவேலியில் மரம் நாட்டும் இயக்கம்

அச்சுவேலி, நவ 25

கிருஷிகப் பகுதி அதிகாரிகள் இப்பகுதியில் மரம் நாட்டும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். இப்பகுதியில் உள்ள கிராமங்களில் மா, பலா, புளி, கமுகு முதலியன மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பண்டித நேரு லண்டன் செல்வார்?

பிரான்ஸ் முழுவதும் வேலைநிறுத்தம்

நாடு ஸ்தம்பித்துப் போயிருக்கிறது

புதிய மந்திரி சபையும் நிலைத்திருக்காது

பாரிஸ், நவ 24

நேற்று பிரதமமந்திரி ஷுமன் நிறுவிய பிரஞ்சு புதிய மந்திரி சபை இன்று பெரும் நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க வேண்டியதாக இருக்கிறது. நாடெங்கும் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் காட்டுத்தீபோல் பரவிவிட்டன. 16 துறைமுகங்களில் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்வதால் கப்பல் போக்குவரத்துகள் யாவும் ஸ்தம்பித்து விட்டன. இன்னும் நாடெங்குமுள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதாலும், உள்நாட்டுப் போக்குவரத்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதாலும் நாடு முழுதும் ஒரே ஸ்தம்பிதமான நிலை ஏற்பட்டுவிட்டது. தபால் தந்தி, ரயில் போக்குவரத்துகள் எல்லாம் ஸ்தம்பித்து விட்டன.

10 லட்சம் தொழிலாளர்களுக்கு மேல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். புதிய மந்திரி சபையும் நிலைத்திருக்காது என்று கருதப்படுகிறது.

13 சோல்ஜர்கள் கொல்லப்பட்டனர்

வட ஆப்பிரிக்காவில் உத்தியோகம் வகிக்கச்சென்ற பிரஞ்சு சோல்ஜர்கள் இன்று தென் பிரான்ஸில் லொறி விபத்துக்குள்ளாயினர். 13 பிரஞ்சு சோல்ஜர்கள் கொலைப்பட்டனர் 16 பேர்கள் காயமடைந்தனர். லொறி ரஸ்தாவை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்ததால் விபத்து ஏற்பட்டது. [ராய்ட்டர்]

கடுகன்னாவைத் தேர்தல் ஆட்சேப மனு

வாபஸ்பெற கோர்ட்டுக்கு விண்ணப்பம்

கொழும்பு, நவ. 25

பாராளுமன்றத்தில் கடுகன்னாவைத் தொகுதி அங்கத்தினரான யூ. பிரேமச்சந்திராவின் தேர்தலை ஆட்சேபித்து திரு. வில்லியம் என்பவரால் ஒரு மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது மனுதாரர் திரு. டி வில்லியம், பிரஸ்தாப ஆட்சேப மனுவை வாபஸ் பெற்றுக் கொள்வதாக சுப்ரீம் கோர்ட்டில் நேற்று விண்ணப்பித்துள்ளார். இந்த வழக்கு நாளை (26) விசாரணைக்கு நியமிக்கப்பட்டிருந்ததாகும்.

அட்லியின் இந்திய ஆஸ்திரேலிய விஜயம் ரத்து

மவுண்ட்பேட்டன் தென்னாப்பிரிக்கா செல்லக்கூடும்

அமெரிக்கா, பிரிட்டன், தூரகிழக்கு ஆசியாவுக்கு இந்திய கப்பல் போக்குவரத்து

லண்டன், நவ 23

பிரிட்டிஷ் பிரதம மந்திரியிடமும் இதர பிரிட்டிஷ் மந்திரிகளாகிய பெவின் ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ், நோவல் பேக்கர் ஆகியவர்களிடமும் இந்தியா-பாகிஸ்தான் உறவுபற்றி லார்டு மவுண்டபேட்டன் என்ன சொன்னாரென்பது ஒருபுறமிருக்க அந்த சம்பாஷணைகள் மூலம் ஒரு விளைவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. டிசம்பர் மாதத்தில் எப்பொழுதாவது லண்டனுக்கு பண்டித நேரு விஜயம் செய்தால் அதை தாம் சொந்த முறையில் பாராட்டுவாரென மவுண்டபேட்டன் மூலமாக பண்டித நேருவுக்கு பிரதமர் அட்லி தெரிவித்ததாகத் தெரிகிறது. கடைசி நிமிஷத்தில் எதிர்பாராத சந்தர்ப்பங்கள் குறுக்கே நிற்காவிடில் லண்டனுக்கு விஜயம் செய்யத் தயாராக இருப்பதாக பிரதமர் அட்லிக்கு நேரு பதிலளித்திருக்கிறாரென்று நினைக்க போதிய காரணங்கள் இருக்கின்றன. தம்முடைய இதர மந்திரிகளின் ஏகோபித்த ஆசீர்வாதத்துடன் பண்டித நேரு டிசம்பரில் லண்டனுக்கு விஜயம் செய்யக்கூடும்.

அட்லிக்கு அதிக அலுவல்

லண்டன், நவ. 24

பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் விஜயம் செய்ய எண்ணியிருந்தார். ஆனால் நாட்டின் நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க அதிக அலுவல் இருப்பதால் அவர் விஜயம் செய்ய முடியாதிருக்குமென்று தெரியவருகிறது.

மவுண்ட் பேட்டன் டில்லிக்கு திரும்பினார்

புதுடில்லி நவ 2

எலிஸபெத் இளவரசி கலியாணத்திற்காக லண்டன் சென்றிருந்த இந்திய கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட பேட்டன் லேடி மவுண்ட் பேட்டனுடனும் புத்திரி பாமலாவுடனும் இன்றிரவு தனி விமானத்தில் டில்லி வந்து சேர்ந்தார். (அ-பிரஸ்)

மவுண்ட் பேட்டன் தென்னாப்பிரிக்கா செல்வார்

லண்டன், நவ 23

இந்தியாவில் அமைதி ஏற்பட்டவுடன் தாம் தென்னாப்பிரிக்காவுக்குப் போகப்போவதாக இந்திய கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் மீண்டும் இந்தியாவுக்குப் புறப்படும் முன் கூறினாரென்று 'ஸண்டே எக்ஸ்பிரஸ்' பத்திரிகை ஒரு செய்தியை பிரசுரித்திருக்கிறது. இந்தத் தகவலை யார் கொடுத்தார்கள் என்பதை அது வெளியிடவில்லை. இந்தச் செய்தியை வேறெந்தப் பத்திரிகையிலும் காணவில்லை.

இரு நாடுகளிலுமுள்ள இந்தியர் தென்னாப்பிரிக்கரிடையே சமரசம் செய்து வைக்கவும் இரு சர்க்கார்களுக்குமிடையே உறுதியான நட்பு ஏற்படுத்துவதற்காகவும் அவர் தென்னாப்பிரிக்காவுக்குப் போகப் போகிறார் என்றும் அப்பத்திரிகை சொல்லுகிறது.

அது மேலும் கூறுவதாவது:- ராஜ குமாரியின் விவாகம் நடந்தபின் அவர் தென்னாப்பிரிக்க பிரதமர் ஸ்மட்ஸை பல தடவை சந்தித்துப் பேசினார். தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை, ஸ்மட்ஸ் சர்க்காருக்கு எதிராக இந்திய சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கைகள்பற்றி சம்பாஷணை நடந்தது.

பிரிட்டிஷ் அதிகார வட்டாரத்தினரோ, லண்டனிலுள்ள தென்னாப்பிரிக்க அதிகார வட்டாரத்தினரோ இந்தச் செய்தி பற்றி எதுவும் கூற மறுக்கின்றனர். எலிஸபெத்தின் விவாகத்திற்காக வந்த ஸ்மட்ஸ் இன்னும் லண்டனில்தான் இருக்கிறார். ஆனால் அவர் என்ன செய்கிறார் என்பது தெரியவில்லை.

ஹைதராபாத்

புதுடில்லி, நவ 23

நவாப் மோயின் நவாஸ்ஜங் தலைமையில் ஹைதராபாத் தூதுக் கோஷ்டியினர் இன்று பம்பாய், மத்திய மாகாணம், சென்னை மாகாண பிரதம மந்திரிகளை கூட்டாகச் சந்தித்தனர். பம்பாய் போலீஸ் மந்திரி ஸ்ரீ மொரார்ஜி தேசாயும் பிரசன்னமாயிருந்தார்.

எல்லையில் சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்கான வழிகளைப்பற்றி ஆலோசிப்பதற்காக இந்த மகாநாடு கூட்டப்பட்டது.

அவசியமானால் நேரடியான தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், அவசியமானால் இரு தரப்பையும் சேர்ந்த சட்டம் ஒழுங்கு இலாகா மந்திரிகள் நேரில் சந்திப்பதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஹைதராபாத் தூதுகோஷ்டி-நேரு சந்திப்பு

புதுடில்லி, நவ 23

இன்று காலை பிரதம மந்திரி பண்டித நேருவை ஹைதராபாத் தூதுகோஷ்டியினர் சந்தித்துப் பேசினர்.

ஸையத் ராஸ்வி-பட்டேல் சந்திப்பு

புதுடில்லி, நவ 23

ஹைதராபாத் மஜ்லிஸ் இத்திஹாத் உல்- முஸ்லிமீன் தலைவர் ஸையத் காஸிம் ரஸ்வி இன்று சமஸ்தான இலாகா மந்திரி சர்தார் பட்டேலை சந்தித்துப் பேசினார்.

காஷ்மீர் நிலைமை

புதுடில்லி நவ 24

30 தினங்கள் முற்றுகையிலிருக்கும் கோட்லியிலிருந்து 9-வது மைலிலுள்ள 100 அடி பாலத்தை நோக்கி இந்திய துருப்புகள் முன்னேறிவிட்டன. இந்த பாலத்தைக் கைப்பற்றி விடின் எதிரிகளின் முற்றுகை தகர்க்கப்பட்டுவிடும். எதிரிகளுக்குப் பலத்த சேதமேற்பட்டு வருகிறது.

டில்லியில்

டில்லியில் 12 கத்திக்குத்து சம்பவங்கள் நிகழ்ந்தன. முக்கிய தெருக்களில் துருப்புகள் பாதுகாவல் செய்து வருகின்றன.

கட்டு கொலை

கல்கத்தாவுக்கு 45 மைல் தூரத்திலுள்ள ரெகாட்டில் அடையாளம் தெரியாத ஒருவர் பிரிட்டிஷ் கிறிஸ்தவ மிஷனைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் டாக்டரையும் ஒரு பிரிட்டிஷ் 'சகோதரி'யையும் சுட்டுக் கொன்றார்.

ஆசிய நாடுகளுக்கு சமதர்ம அரசாங்கங்களே அவசியம்

இந்தியாவைப்பின்பற்றினால்தான் ஆசிய மக்களுக்கு நன்மையுண்டு

பர்மா சர்க்கார் கட்சிக் காரியதரிசியின் தீர்க்கதரிசனம்

கல்கத்தா, நவ. 24

இன்று பர்மா சர்க்கார் கட்சியான பாஸிஸ்ட் எதிர்ப்பு சுதந்திர லீகின் காரியதரிசியும் பர்மா தொழிற்சங்க காங்கிரசின் தலைவருமான தக்கின் லீன் பத்திரிகா நிருபர்கள் கூட்டத்தில் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

ஆசிய நாடுகள் எல்லாவற்றிலும் சமதர்ம (சோஷியலிஸ்ட்) அரசாங்கங்கள் ஏற்படவேண்டியது மிகவும் அவசியமாகும். ஆசியாவில் அப்படிப்பட்ட சோஷியலிஸ்ட் அரசாங்கத்தை ஏற்படுத்த வல்லமையுடையது இந்தியா ஒன்றுதான். இந்தியாவைப் பின்பற்றி மற்ற ஆசிய நாடுகள் சோஷியலிஸ்ட் அரசாங்கங்களை நிறுவுவதற்கு இந்தியா உதவியாக இருக்கும். இந்தியாவின் தலைமைப் பதவியைப் பின்பற்றினால் ஆசியா மக்கள் அனைவருக்கும் சுபீட்சம் உண்டு.

தக்கின் லீன் புதுடில்லியில் நடைபெற்ற ஆசியா தொழிலாளர் மகாநாட்டுக்கு பர்மா பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவராக விஜயம் செய்திருந்தார். (அ-பிரஸ்)

நூரனையில் தமிழ்ப் பாடசாலை மூடப்படும்

கட்டிடம் மராமத்து இலாகாவுக்கு தேவையாம்

நூரனை, நவ. 25

நூரனையில் 1928-ம் வருடம் முதல் தமிழ்க் கலவன் பாடசாலை இருந்து வரும் கட்டிடம் இப்பொழுது மராமத்து இலாகாவுக்கு தேவைப்படுவதாகவும் இப்பகுதியில் பள்ளிக்கூடத்தை வைத்து நடத்த வேறு வசதியான இடம் இல்லாததால் அப்பள்ளிக்கூடம் மூடப்படுமென்றும் கூறப்படுகிறது. 1928-ம் வருடம் முதல் நடந்து வந்த பாடசாலை இனிமேல் மூடப்படும்.

தங்க சுரங்க விபத்து

கோலார் தங்கச் சுரங்கத்தில் சரிவு ஏற்பட்டு 15 தொழிலாளர்கள் புதையுண்டனர்.

இந்திய கப்பல் வர்த்தகம் பற்றி வால்சந்த்-ஹீராசந்த

பம்பாய், நவ. 21

இன்று ஸிந்தியா நேவிகேஷன் கம்பெனியின் விசேஷ கூட்டத்தில் அதன் அக்கிராசனர் வால்சந்த் ஹீராசந்த் பேசுகையில் வர்த்தக மந்திரி இந்த மாத ஆரம்பத்தில் இந்திய கப்பல் கம்பெனிகள் கூட்டத்தில் கூறிய யோசனைகளை விளக்கினார். அதிக மூலதனம் அகப்படும் வகையில் வரி விதிப்புக் கொள்கை ஏற்பட்டால் இன்னும் 5 அல்லது 7 வருஷங்களில் 20 லட்சம் டன் எல்லையை அடைந்துவிட முடியுமென்றும் அந்த எல்லையை அடைய 150 கோடி ரூபாய் மூலதனம் இன்னும் முடக்கப்படவேண்டுமென்றும் அவர் கூறினார்.

இந்தியா - ஆஸ்திரேலியா, இந்தியா-தூரகிழக்குப் பிரதேச கப்பல் போக்குவரத்து ஆரம்பிப்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடந்து வருவதாக ஸ்ரீ வால்சந்த் ஹீராசந்த் அறிவித்தார்.

விமானப் போக்குவரத்து

புதுடில்லி, நவ. 24

வழக்கம்போல செல்லும் விமானங்கள் தவிர மற்ற அந்நிய விமானங்கள் இந்தியாவில் பறந்து செல்லும்போது இந்திய விமான நிலையங்களில் இறங்கி சுங்கப் பரிசோதனைக்குட்பட்டுச் செல்லவேண்டுமென்றும் இவ்வுத்தரவை மீறும் விமானங்கள் சுட்டுத்தள்ளப்படுமென்றும் இந்திய சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

குகைக் கோவிலுக்கு மின்சார வெளிச்சம்

ரூ. 35,000 செலவில் அமைக்கப்படும்

கொழும்பு, நவ 25

அம்பாந்தோட்டை டிஸ்டிரிக் பகுதியில் முல்கிரிகலை என்னுமிடத்திலுள்ள 2246 வருட பழமை வாய்ந்த குகைக் கோவிலுக்கு மின்சார வெளிச்ச வசதிகள் அமைக்க எம் ஸ்ரீ சோமநாத நாயக தேரோ ஒரு திட்டப்படி வேலைகளை ஆரம்பித்துள்ளார். இங்குள்ள பழம் ஆலயத்தில் ஏழு விகாரைகளும், மூன்று டகோபாக்களும் இருக்கின்றன. ஸிகிரியா குகையிலுள்ள ஓவியங்களிலும் பார்க்க பழைமையான ஓவியங்கள் இங்கு தீட்டப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் மின்சார வெளிச்சங்கள் பொருத்தப்படும். இத்திட்டத்துக்கு சுமார் 35000 ரூபா தேவையென்று கூறப்படுகிறது.

வெங்காயத்தில் கொள்ளை லாபம்

எதிரிகளுக்கு அபராதம்

கொழும்பு, நவ 25

எஸ். ரெட்டியார் ராமன் என்னும் ஒருவர் ராத்தல் வெங்காயம் ஒரு ரூபாய்க்கு விற்றதாக ரூ 600 அபராதம் கொழும்பு தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட்டால் விதிக்கப்பட்டது.

ஹல்ஸ்டார்ப் ஸ்டிரீட்டைச் சேர்ந்த என். ஹ. அருணாசலம் என்பவர் ராத்தல் வெங்காயம் 80 சதமாக விற்றதாக குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் நீதிபதி எதிரிக்கு ரூ 400 அபராதம் விதித்தார்.

கஞ்சா வைத்திருந்த பெண்ணுக்கு ரூ. 800 அபராதம்

கொழும்பு, நவ 25

கிரிலப்போனையில் உள்ள டபிள்யூ ஏ மேரிநோனா என்னும் பெண் சுமார் அரை ராத்தல் கஞ்சா வைத்திருந்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் கொழும்பு தெற்கு மஜிஸ்டிரேட் எதிரிக்கு ரூ. 800 அபராதம் விதித்தார்.

பர்மா சுதந்திர மசோதா

டிஸம்பர் முதல் வாரத்திற்குள் மன்னர் அங்கீகாரம்

லண்டன், நவ 24

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குப் புறம்பாக பர்மாவுக்கு பூரண சுதந்திரமளிக்கும் மசோதா டிஸம்பர் முதல் வாரத்திற்குள் மன்னர் அங்கீகாரத்தைப் பெற்றுவிடும். ஜனுவரி 4-ம் தேதி அதிகாரம் மாற்றப்படும். [ராய்ட்டர்]

இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் திக் விஜயம்

பாரிஸில் உலகத் தொழிலாளர் ஐக்கிய சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

அடுத்த வருடம் கல்கத்தாவில் ஆசிய தொழிலாளர் சங்க காங்கிரஸ் கூடும்

பாரிஸ், நவ 24

ரஷியாவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு ஐரோப்பாவில் சுற்றுப்பயணம் செய்துவரும் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் தலைவர் திரு எஸ். டாங்கே இப்பொழுது பாரிஸில் நடைபெறும் உலகத் தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்.

உலகத் தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அடுத்த வருடம் கல்கத்தாவில் ஆசிய தொழிலாளர் சங்க காங்கிரஸ் மகாநாடு நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். நிர்வாக சபை இந்த ஆசியா மகாநாட்டை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஒரு கமிஷனை ஆசிய நாடுகளுக்கு அனுப்பிவைக்கத் தீர்மானித்திருக்கிறது.

திரு டாங்கே இந்த வாரம் லண்டனுக்குச் சென்று அங்கு பிரிட்டிஷ் தொழிற்சங்க காங்கிரஸ் நிர்வாகிகளைச் சந்தித்துப் பேசுவார். அதன் பிறகு அவர் சுவிட்ஜர்லந்து சென்று சர்வதேச தொழில் ஸ்தாபன சம்பந்தமாக சுவிட்ஜர்லந்து சர்க்கார் அதிகாரிகளுடன் கலந்து பேசுவார். வேலைத் திட்டங்களில் சர்வதேச தொழில் ஸ்தாபனத்துடன் சம்பந்தம் ஏற்படுத்த ஒத்துழைக்கவும் உலகத் தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் நிர்வாக சபையினர் தீர்மானித்திருக்கின்றனர். (ராய்ட்டர்)

சிங்களப் பத்திரிகை எழுதுவது

இலங்கையில் திராவிடஸ்தானும் சிங்களஸ்தானும் ஏற்பட்டுவிடும்

வகுப்பு ஒற்றுமைக்கு வழிதேட வேண்டும்

போக்குவரத்து மந்திரி பத்திரிகையின் 'திண்ணை வேதாந்தம்'

யூ. என். பி. பிரசாரக் கமிட்டிப் பத்திரிகையாம், தொடங்கஸ்லந்தைத் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தவரும், யூ. என். பி. பத்திரிகைகளின் அதிபருமான, போக்குவரத்து மந்திரி ஜே. எல். கொத்தலாவலையின் [illegible] [21-11-47] என்னும் சிங்களப் பத்திரிகையில் எழுதியிருப்பதன் தமிழாக்கம்:

வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் [illegible] சமத்துவமற்ற நிலை—தேசிய தொழிலாளர்—ஆகியோர் இலாபம் செல்வாக்கும் பெருகுவது—சுதந்திர லங்காவை நிர்மாணம் செய்வதே நமது நாட்டின் நோக்கமாகும். தெற்காக உழைப்பவர் எமது [illegible] அவலாகும். இந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கக் கொள்ள வேண்டுமென்பது தென்னவென்றால், இத்தேசத்தில் வாழும் பலதரப்பட்ட சாதிபக்தரிடையே இருக்கும் சந்தேகங்களையும் குற்றச்சாட்டுகளையும் நீக்கி அச்சமொழிந்த நல்லெண்ணச் சூழ்நிலையை உண்டாக்குவதும் செய்வதோடு மற்றெல்லா பிரச்னைகளிலும் பார்க்க இதற்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டுமென்பது எமது அபிப்பிராயமாகும். நாங்கள் மாத்திரமல்ல தேசத்தின் உன்னதத்தை விரும்புகிற சிறிதேனும் ஆர்வமுள்ள யாவரும் எமது இந்த அபிப்பிராயத்தை ஆமோதிப்பார்களென்றே நம்புகிறோம்.

அப்படியன்றி, இன்று தேசமுள்ள நிலைமையில் இந்த வகுப்புக் குழப்பத்தை அலட்சியம் செய்துவிட்டால் இலங்கையிலும், இந்தியாவைப் போன்று ஒரு திராவிடஸ்தானும் சிங்களஸ்தானும் உண்டாவதைத் தவிர்க்க முடியாதென்பதை நாம் உணர வேண்டும்.

வடக்கே தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களான திரு பொன்னம்பலம், டாக்டர் நாகநாதன் ஆகியோர்களுடைய [illegible] அப்படித்தான் ஆக வேண்டுமென்று கூறுகிறது. வகுப்புவாதம் என்பது பொதுமக்களிடையே மிகவும் எளிதாய்ப் பரப்பிவிடக்கூடிய கொள்கையாகும். இந்த வகுப்புவாதத்தை ஆயுதமாகக் கொண்டே தான் சென்ற தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் செல்வாக்கடைந்ததென்பதை சொல்லவேண்டிய அவசியமில்லை. தேர்தல் காலங்களில் தமிழ்க் காங்கிரஸ் காரர்கள் சிங்களவர்களுக்கு எதிராக உண்டாக்கிய துவேஷமான—நிந்தனையான—பிரசங்கங்களினால் சிங்கள மக்கள் கொண்டிருந்த பலமான குரோதத்தையும் பரபரப்பையும் மிஞ்சவிடாமல் அமரச் செய்தது யூ. என். பி. யேயாகும்.

எனினும் நிலைமையை இப்படியே அடக்கி மறைத்துக் கொண்டு எங்களுக்கு அதிககாலம் இருக்க முடியாது.

சொல்லில் மாத்திரமல்ல வட இலங்கையிலிருந்து எங்களுக்கு உண்மையான ஒத்துழைப்பு கிரியாம்சத்தில் கிடைக்காவிட்டால் இதற்குப் பொறுப்பாய் உள்ளவர்கள் அதற்கான சந்தர்ப்பம் வரும்போது தகுந்த காரணம் காட்டுவதற்கு இப்பொழுதிருந்தே தயாராகிக்கொள்ள வேண்டும்.

ஒரு சமயம் அப்படியொரு அசம்பாவிதம் இந்நாட்டில் ஏற்படுமாயின் அது மிகவும் பயங்கரமானதாயிருக்கும். தேச மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணத்துடன் சமாதானம் உண்டாகாவிடின் எதிர்காலம் மங்கலாய்த்தானிருக்கும். சமூக மக்கள் ஆழ்ந்த பள்ளத்தாக்கில் விழுந்துவிடுவார்கள்.

அந்த பயங்கரமான சமயத்தில் ஆனையிறவுக்கு அப்புறம் தெற்கே ஒரு பொன்னம்பலத்திற்கு அடிவைக்க முடியாதென்பதோடு, அதேயிடத்திற்கப்பால் சிங்களத் தலைவர்கள் அடிவைப்பதையும் விட்டுவிடுவார்களென்பது முடியாத காரியமல்ல.

ஒரு சமயம் அப்படி ஒரு பயங்கரமான நிலைமை ஏற்பட்டுவிடின் கொழும்பிலும் அடுத்துள்ள பிரதேசங்களிலும் சிறு கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டிருக்கும் யாழ்ப்பாண உத்தியோகஸ்தர்களினதும் வியாபாரிகளினதும் நிலைமை என்னவாயிருக்குமென்று நினைப்பதே நடுக்கத்தைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. இவர்களெல்லோரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களைப் போல் எத்தனையோ வருட காலமாக எங்களுடன் வாழ்ந்து வந்தார்கள்.

எனவே தேச மக்களிடையே இந்த வகுப்பு வெறி தலைதூக்கி ஒரு பயங்கரமான நிலைமை உண்டாவதை தேச மக்களின் அபிவிருத்தியில் ஆர்வமுடைய எந்தவொரு தேசாபிமானி விரும்பவும், பார்த்துக்கொண்டிருக்கவும் மாட்டான்.

"சிலோன் டைம்ஸ்" பத்திரிகையும் மற்றும் சிங்கள தமிழ் பத்திரிகைகளும் சமீப காலமாக இருந்து தேசத்தின் வகுப்புவாதத்தை பரப்பிவிடுவதில் பலத்த முயற்சியெடுத்து வருகிறதென்று மிகவும் மனவருத்தத்துடன் குறிப்பிட வேண்டியிருக்கிறது. சென்ற காலங்களில், முக்கியமாக சோல்பரி கமிஷனர்கள் இந்நாட்டில் விசாரணை செய்து கொண்டிருந்த சமயத்தில் "டைம்ஸ்" பத்திரிகை சிங்களவர்களுக்கு எதிராக முற்றும் பொய்யான குற்றச்சாட்டை உண்டாக்கி நிந்தனையான முறையில் துவேஷத்தை விதைத்ததை எவரும் மறந்து போய் இருக்க மாட்டார்கள். எனினும் அவை யாவற்றையும் மறந்து விடும்படி நான் என் தேச மக்களையும் விசேஷமாக சிங்களவர்களையும் விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன்.

யூ. என். பி. இலங்கையர்களிடையே நல்லெண்ணத்தையும் ஒற்றுமையையும் உண்டாக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருப்பதோடு, வர்க்க பேதமற்ற சுதந்திர முன்னணியை நிர்மாணிப்பதற்கு பிரயத்தனம் செய்து கொண்டு வருகிறது. கேவலமான மூடவிசுவாச முறை ஒழிப்பதும் எமது உறுதியான ஆவலாகும். காலபோக்கை அனுசரித்து தேச மக்களின் அபிவிருத்திக்கு அத்தியாவசியமான வற்றிற்காக உழைப்பது எமது நோக்கமென்று மறுபடியும் கூற விரும்புகிறேன்.

சீனத் தேர்தல்கள் முடிவுற்றன

கமியூனிஸ்டுகளின் ராணுவ வெற்றிகள்

ஷாங்கை, நவ 23

சீனாவின் முதலாவது பொதுத்தேர்தல் இன்று முடிவுற்றது. தேர்தலில் எவ்வித உற்சாகமும் காணப்படவில்லையென்று தெரிகிறது.

ஆள்மாறாட்டமாக வோட்டுகள் உபயோகிக்கப்பட்டிருப்பதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இன்னும் தேர்தல் முடிவுகள் வெளியாகவில்லை.

உள்நாட்டுப் போர்

கமியூனிஸ்ட் துருப்புகள் யாங்ஸி ஆற்றின் பிரபல துறைமுகமான ஹாங்கோவில் தமது தாக்குதலை மிக முழுமூச்சாக நடத்தி வருகின்றன. இதனை ஒற்றைக்கண் கமியூனிஸ்ட் தளகர்த்தரான லியூ பேச்செங் நடத்திவருகிறார். ஏற்கனவே லின்சேவ கமியூனிஸ்டு கரங்களில் சிக்கிவிட்டதாகத் தெரிகிறது. (ராய்ட்டர்)

ஆசிரியருக்குக் கடிதம்

சுதந்திரமா? மரண சாஸனமா?

ஐயா,

இலங்கைக்குச் சுதந்திரம் வந்துவிட்டதென யூ என் பி கும்பல்கள் கும்மாளம் போடுகின்றனர். ஆனால் சுதந்திர மசோதா பற்றி காமன்ஸ் சபையில் விவாதம் நடந்தபோது ஒரு யுத்தம் ஏற்பட்டால் சாம்ராஜ்யத்தைப் பாதுகாப்பதில் இலங்கை முதல் ஸ்தானம் பெறுமென தெரிவிக்கப்பட்டது. இதைச் சற்று உற்று யோசித்தால் சேனநாயக்கா தம் மூலம் கொணர்ந்த சுதந்திரத்தைச் சட்ட நிபுணர்கள் அடிமைச் சாஸனம் என்றனர். இதைவிட அதை மரண சாஸனமென்றே சொல்ல பொருத்தமென நினைக்கிறேன். நாம் எந்நாட்டையும் அடிமையாக்க யுத்தத்தில் இறங்க வேண்டாம். இல்லை நம் அடிமை விலங்கை தகர்த்தெறியவே நாம் முயற்சிக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால் நாமேன் யுத்தத்தில் இறங்க வேண்டும்? பிரிட்டிஷார் தங்கள் ஏகாதிபத்தியத்தைக் காப்பதற்காக, ஏதாவதொரு நாட்டுடன் யுத்தத்தில் இறங்கினால் நாமும் அதற்குதவிபுரிய அதில் இறங்க வேண்டிவரும்! சேனநாயக்கா கொணர்ந்த சுதந்திரத்தின்படி. இவ்விதமே, உடன் பிரிட்டன் இலங்கையைத் தன் யுத்தத் தளமாகப் பாவிக்கும். அப்போது எதிரிநாடுகள் நம் நாட்டில் பிரங்கிகளை உபயோகியாதிருப்பார்களா? இல்லை. பிரங்கிப் பிரயோகம் செய்தால் தீவுவாசிகள் அப்போது எத்தனை உயிர்களை இழக்க நேரிடும்; எத்தனை வீடுகள் இடிந்து தரைமட்டமாகும். புனிதமான ஆலயங்கள் எத்தனை இடிய நேரிடும்; இவைகளை யோசிக்கும்போது மேற்கூறியவாறு அதை மரண சாஸனமென்று கூறுவதே சாலச் சிறந்ததாகும். 25-ந் தேதி ஆரம்பமாகும் பார்லிமெண்டில் சுதந்திர மசோதாவைப் பற்றி விவாதம் வரும்போது எதிர்க்கட்சியினர் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டும். இம்மசோதாவைப் பற்றி பொதுமக்கள் வாயாற் குறை கூறுவதை விட்டு ஒவ்வோரிடத்திலும் கூட்டங்கள் வைத்து தங்கள் ஆட்சேபணையைத் தெரிவித்தல் வேண்டும். நமக்கு வேண்டிய சுதந்திரம் பரிபூரண சுதந்திரமே! அதற்காகவே போராடப்பட வேண்டும்.

இங்ஙனம்,
மா. மு. பொன்னம்பலம்
77, கில்வீதி கொழும்பு
24-11-47

கண்டியில் நிலவரி உயர்வு

கண்டி, நவ. 25

நிலவரியை 22 அரை வீதமாக உயர்த்துவதற்கு கண்டி நகரசபை தீர்மானித்துள்ளது. இதன்படி முன்னர் இருந்ததைவிட புதிய வரி விகிதம் இரண்டரை வீதம் அதிகமாகும். இதன்பயனாக 55,000 ரூ. நகர சபைக்கு வருமானம் உண்டாகுமெனக் கணக்கிடப்படுகிறது.

சுட்டுக் கொலை

கொழும்பு, நவ 24

ஹன்கமா போலிஸ் ஸ்டேஷனுக்கு எட்டு மைல் வடக்கேயுள்ள பொபாலந்தி என்னுமிடத்தில் நேற்றிரவு 9 அரை மணிக்கு ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். இது சம்பந்தமாக எல். பி. எச். டொன் டியோனிஸ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுடப்பட்ட காரணம் தெரியப்படவில்லை.

நம்பிக்கை மோசம் செய்ததாக வழக்கு

கொழும்பு, நவ 25

வத்தளையைச் சேர்ந்த திரு. ஜே. ஜே. சேகமணிக்கம் என்பவரிடமிருந்து வாங்கிய ரூ 150 சம்பந்தமாக நம்பிக்கை மோசம் செய்ததாக திரு செகராட் என்பவர் மீது குற்றம் சாட்டி கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் எதிராளி தாம் குற்றவாளியல்லவென்று கூறியதால் நீதிபதி வழக்கை டிஸம்பர் 11-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

ஆங்கிலேயர் காலடியில் அடைக்கலம் புகுந்ததேன்?

கொல்வின் திட்டம் ஈடேறின் இந்தியாவை எதிர்ப்பதற்கே!

சிங்கள நாட்டில் யானை மீது சிங்கக் கொடியுடன் ஊர்வலம் சென்ற சிங்கள மந்திரிகளின் பேச்சு

கொழும்பு, நவ 25

சமுனியில் [illegible] பகுதியிலுள்ள [illegible] பாடசாலை மண்டபத்தில் தொழில் மந்திரியும் பாராளுமன்ற கம்பஹா அங்கத்தவருமான திரு ஏ. ஈ. குணசிங்க தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிங்கள ஜாதிக ஆரக்ஷா பிரசார இயக்கம் (சிங்கள ஜாதி பாதுகாப்பு பிரச்சார இயக்கம்) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பேலியகொடை தொகுதியிலிருந்து திருவாளர்கள் குணசிங்கா, டட்லி சேனநாயக்கா, ஏ. ரத்னாயக்கா, ஜே. ஆர். ஜயவர்த்தனா, ஸ்ரீமதி [illegible] ஆகியோர் ஊர்வலமாக பாடசாலை மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஊர்வலத்தில் யானைகள்மீது சிங்கக் கொடி பிடித்துச் செல்லப்பட்டது. திரு டட்லி சேனநாயக்கா பேசுகையில் கூறியதாவது:-

'விரைவிலேயே நாங்கள் சுதந்திரமடைந்துவிடுவோம். தேச சுதந்திரத்துடன் கடமைகளும் நமக்கு இருக்கின்றன. சுதந்திரம் நாங்களுக்கு உரிமைகளை அளித்துள்ளது.

உலகம் இப்பொழுதுள்ள நெருக்கடியான நிலையில் சிறிய சாகியத்தாராய சிங்கள மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இதற்காகவே நேச நாடாகிய இங்கிலாந்தின் உதவியை நாடுவோம். இதனால் மற்ற அரசாங்கங்களுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தங்களுக்கு தடையும் இருக்கமாட்டாது.

இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துகொள்வது பின்னர் கவனிக்கவேண்டிய விஷயமாகும். இப்பொழுது உள்நாட்டுக் கலகங்களுடன் இந்தியா தன்னைத்தானே சமாளித்துக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறது. டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் திட்டம் அமுல் நடத்தப்படின் இந்தியாவின் மக்கள் குடியேறுவது சம்பந்தமாக நாங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்".

நீதி மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா பேசுகையில் கூறியதாவது:-

'திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் செய்யும் பிரசாரம் தமிழ் மக்களுக்கோ சிங்கள மக்களுக்கோ இரு பகுதியினருக்கும் நன்மை பயக்கமாட்டாது. இலங்கையிலுள்ள மக்கள் எந்தச் சாகியத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஒரு அந்நிய நாட்டின் உதவியை நாடப்படாது. இலங்கைக்கு இந்திய மக்களை எல்லையின்றி குடியேறவிட அனுமதிப்பது நல்லதென நம்பும் அரசியல் கட்சிகளிடம் சிங்களவர்கள் கொண்டுள்ள பீதியைப் போன்று தமிழ் மக்களும் கொண்டுள்ளனர். சிங்கள மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதென தீர்மானித்துள்ளனர். இதற்கு தமிழ் மக்களுடைய உதவியையும் கொண்டே செய்ய விரும்புகிறோம். இது சாத்தியமாகாத விஷயமென்று கண்டால் தமிழ் மக்கள் இல்லாமலே சிங்கள மக்கள் தங்களைப் பாதுகாக்கும் வேலையில் ஈடுபடுவர்.

திரு ஏ. ஈ. குணசிங்கா பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையின் கொடியாக சிங்கக்கொடியே இருக்கவேண்டும். யுத்த அரங்குகளில் இக்கொடி பறந்துள்ளது. லக்ஷக்கணக்கான சிங்கள மக்களின் இரத்தத்தால் ஊறி நனைந்த கொடியே இது. இங்கு அரிவாளும் சம்மட்டியும் சின்னமாகக் கொண்ட கொடி பறக்க ஒரு காலத்திலும் விடமாட்டேன். இந்த முடிவுக்கு எல்லா மக்களும் ஒற்றுமையுடன் போராடவேண்டும்.

* * *

ஸ்ரீமதி பண்டிட்டிடம் நீக்ரோ பெண்கள் தூது

அமெரிக்க தாதித் தொழிலில் சேர்க்கும் பிரசாரத்திற்கு ஆதரவு

நியூயார்க், நவ. 24

அமெரிக்கத் தாதிப் பெண்கள் கோஷ்டியில் நீக்ரோ தாதிப் பெண்களையும் வேலைக்கெடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற பிரசாரத்தில் இன்று ஸ்ரீமதி. விஜயலட்சுமி பண்டிட் கலந்துகொண்டார். ஐக்கிய தேசப் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும்போது இடைவேளையில் அமெரிக்க வெள்ளையரல்லாத பட்டதாரிப் பெண்களின் தூதுகோஷ்டியினர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்டைச் சந்தித்தார்கள். ஸ்ரீமதி பண்டிட், அவர்களுடன் நின்று 'போட்டோ படம்' பிடித்துக்கொண்டார். (ராய்ட்டர்)

* * *

கொலன்னாவை ரஸ்தா துப்பாக்கிப் பிரயோக வழக்கு

9-வது எதிரிக்கு ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை

வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, நவ. 25

கொலன்னாவை ரஸ்தா துப்பாக்கி பிரயோக வழக்கில் ஒன்பதாவது எதிரியான எம். பகீர் ஆஸ்பத்திரியிலே தொடர்ந்து சிகிச்சைபெற்று வருவதாகவும் அவரது நிலைமை ஆபத்தானதாக இருப்பதாகவும் கொழும்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது. சட்ட விரோதமாக கூட்டம் கூடி போலிஸ் சார்ஜண்ட் ஏக்கநாயக்காவைச் சுட்டுக் கொலைசெய்ய முயற்சித்ததாக ஒன்பது பேர்கள் மீது போலிசாரால் குற்றம் சாட்டப்பட்ட வழக்கே இது. ஒன்பதாவது எதிரி வராதுவிட்டாலும் தாம் வழக்கை நடத்துவதாக கூறி தற்காலிக பிரதம மாஜிஸ்டிரேட் இவ்வழக்கை டிசம்பர் 12-ம் 13-ம் தேதிகளுக்கு ஒத்திவைத்தார்.

இலங்கையின் பாதுகாப்புப் பிரச்னைகள்

பிரிட்டிஷ் தளபதிகளுடன் விவாதம் நடக்கும்

கொழும்பு, நவ. 25

கிழக்கு இந்திய கடற்படை பிரதம தளபதி அட்மிரல் ஸர் ஆர்தர் பாலிசெர், தூர கிழக்கு நேசதேச தரைப்படை பிரதம தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸர் நீல் ரிச்சி, தூரகிழக்கு பிரதம விமானப்படைத் தளபதி மார்ஷல் ஸர். ஹியூ லாயிட் ஆகிய மூன்று உயர்தர பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் இங்கு பாராளுமன்ற திறப்பு விழாவுக்காக வந்திருக்கின்றனர். இப்பொழுது இலங்கையின் பாதுகாப்புப் பிரச்னை சம்பந்தமாக முக்கியமான பேச்சு வார்த்தைகள் இவர்களுடன் நடத்தப்படலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பேச்சு வார்த்தைகளில் பிரிட்டனுடைய ராணுவ கடற்படை, தரைப்படை, விமானப்படை முதலியவைபற்றிய பிரச்னைகளும் விவாதிக்கப்படுமென்று தெரிகிறது. இப்பேச்சு வார்த்தைகளில் இலங்கையின் உயர்தர அரசாங்க அதிகாரிகளும் பங்கு எடுத்துக்கொள்ள கேட்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

செனட் சபைக்கு புதிய அங்கத்தவர்

திரு ஹேர்பர்ட் எரிக் ஜான்ஸ் நியமனம்

கொழும்பு, நவ 24

இலங்கை செனட் சபைக்கு மேதகு கவர்னர் திரு. ஹேர்பர்ட் எரிக் ஜான்ஸ் என்பவரை நியமித்துள்ளதாக கவர்னர் காரியாலய அறிக்கையொன்று கூறுகின்றது. செனட் சபையில் டாக்டர் ஷோகமன் தமது பதவியில் இருந்து ராஜினாமா செய்துவிட்டதால் ஏற்பட்ட காலி ஸ்தானத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

மதுரை ஸ்டுடியோவில் தீ விபத்து

படம் பிடிக்கும் கட்டிடம் சேதம்

மதுரை, நவ 28

மதுரைக்கு வெளிப்புறத்திலுள்ள ஒரு சினிமா ஸ்டுடியோவில் இன்று விடியற்காலை தீ விபத்து நேர்ந்தது. நெருப்பணைக்கும் இஞ்ஜின்கள் உடனே ஸ்தலத்துக்கு விரைந்து சென்று இரண்டரை மணி நேரம் நெருப்புடன் போராடி அணைத்தன. உயிர்ச்சேதமொன்றுமில்லை. படம் பிடிக்கும் ஸ்டுடியோ மட்டும் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது.

ஈகிள் ஹவுஸ்
உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த மேற்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

ஐசிங் சுகர்
இலங்கையில் முதல்தரமானது
குயின் (ராணி) மார்க்.

இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.

7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00
28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00

எங்கள் ஸ்டோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸ்டிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.

குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,
861, அளுத்மாவத்தை ரோடு,
முகத்துவாரம்,
கொழும்பு.
தந்தி "Confection" போன்: 4511


விற்றோ
பழ ரச
பானங்கள்!
Vitto
Fruit Syrup
THE VITTO PRODUCTS Co DEHIWALA-COLOMBO

1. பாலுடன் கலந்து பாவிக்கக்கூடிய பழரசம் எது? விற்றோ.
2. குடிவகைகளுடன் கலந்து உடம்பு போஷிக்கப் பாவிக்கும் பழரசம் எது? விற்றோ.
3. பழத்தண்டு பழச்சார் ஐஸ்கிரீம் இவைகளுடன் கலந்து நல்ல வாசனையையும் ருசியையும் கொடுக்கும் பழரசம் எது? விற்றோ.
4. புடிங்ஸ், ஜெலீஸ், கேக், ஜாம் இவைகளுடன் கலந்து ருசியைக் கூட்டும் பழரசம் எது? விற்றோ.
5. தண்ணீருடனாவது, சோடாவோடாவது கலந்து தாகம் தீர்க்கும் மனோகரமான பழரசம் எது? விற்றோ.

குளிர்ந்த பானங்கள்:

போருட்டோ
ஸ்ட்ரோபெரி
செரி
ஓரேஞ்பார்லி
ஜிஞ்சர்ஏல்
பயின்ஆப்பிள்
லெமன்பார்லி
ஜிஞ்சர்பியர்
கோலா சாம்பேயின்
ஓரேஞ்க்ரேஷ்
ரூஸ்பெரி
கவிட் விற்றோ

எல்லாரும் விற்றோ புரொடெக்ஸ் குளிர்ந்த பானங்களையே உங்கள் வீடுகளில் வாங்கிப் பாவியுங்கள்!

சோல் ஏஜண்ட்ஸ்:- சிவராணி அன் கோ,
20, அம்மன் ரோடு, யாழ்ப்பாணம்.
தயாரிப்பவர்கள்:-
விற்றோ புரொடெக்ஸ் கம்பெனி லிமிட்டெட்.
தெஹிவளை.

நியூ போர்ட் கார்னிவல்

புறக்கோட்டை பஸ்ஸ்டாண்ட் முன்னுள் நடைபெறும். 27-11-47 வியாழக்கிழமை சாயங்காலம் 5 30 மணியளவில் திறக்கப்படும். வியாபார காட்சியறைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும்

பிரதிநிதிகள் சபைக்கூட்டம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி] பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் பெப்ரவரியில் சுதந்திர மசோதா பற்றிய விவாதம் நடத்தப்படுமென்றும் வரவுசெலவுத் திட்ட மசோதா அடுத்த வியாழக்கிழமை சபையில் கொண்டுவரப்படுமென்றும் கூறினார்.

கவர்னரது பிரசங்கம் சம்பந்தமாக நடக்கப்படும் விவாதத்துக்கு காலம் குறிப்பிடப்பட வேண்டுமென டாக்டர் என். எம். பெரேரா கூறியபோது அரசாங்க கட்சி தலைவருடன் இதுபற்றி ஏற்பாடுகளை செய்து கொள்ளும்படி சபாநாயகர் டாக்டர் பெரேராவிடம் தெரிவித்தார்.

இதன் பின்னர் அரசாங்க கட்சித் தலைவர் தெரிவுக் கமிட்டி பற்றிய தீர்மானத்தைச் சமர்ப்பித்துக் கொண்டுவந்தார். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சர்வகலாசாலை சபைக்கு அங்கத்தவர் தெரிவு சம்பந்தமான தீர்மானத்தை தலைவர் சபையில் கொண்டுவந்தார். அங்கத்தவர் [illegible] இடையில் சர்வகலாசாலை சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவதில் ஒற்றுமை ஏற்பட்டால் தாமதமாகுமென சபாநாயகர் கூறினார். இதன் பின்னர் சபாநாயகர், கவர்னருடைய பிரசங்கத்தை சபையில் வாசித்தார்.

சில தீர்மானங்கள் பற்றி சபாநாயகர் குறிப்பிடுகையில் முக்கியமாக ருவன்வெலி பிரதிநிதி டாக்டர் என். எம். பெரேராவின் தீர்மானங்கள் வரவு செலவு திட்டம் விவாதிக்கப்படு முன் விவாதத்திற்கு எடுக்கப்பட முடியாதென்றும் அத்தீர்மானம் இப்பொழுது வாபஸ் பெற்றுக்கொள்ளப்படி கூறினார். இதனை டாக்டர் பெரேரா ஏற்றுக்கொண்டார்.

வெலிமடை தொகுதி அங்கத்தவர் [illegible] ஜெயவிக்கிரமா கவர்னரின் பிரசங்கத்திற்கு அவருக்கு நன்றி கூறும் தீர்மானமொன்றை பிரேரேபித்தார். இத்தீர்மானத்தைப் பிரேரேபிக்கையில் இலங்கையின் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களில் முக்கியமாக திரு எப். ஆர். சேனநாயகா, ஸர் பி. இராமநாதன், ஸர் பி. அருணாசலம் ஆகியோரைக் குறிப்பிட்டதுடன் இப்பொழுதைய பிரதமர் திரு சேனநாயகாவைப் பற்றியும் குறிப்பிட்டார். மேலும் இவர் இலங்கையின் ஆயுதக [illegible] மாற்றம், வரவு செலவுத் திட்ட முறைகளைப் பற்றியும் குறிப்பிட்டு இலங்கை தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்ய விவசாயத் துறையில் முன்னேற்றமடைய வேண்டுமென்றும், கல்வி, மத்தியதர வீட்டு வசதிகள், கரம்பை நிலங்களுக்கு ஜல வசதியோக திட்டங்கள், வைத்திய வசதிகள், தேச கைத்தொழில் அபிவிருத்தி முதலியவற்றைப் பற்றிப் பேசினார்.

அரசாங்க ஊழியர்களின் தொழிற் சங்க உரிமைகளைப் பற்றி பேசுகையில் பிரதமரின் நடவடிக்கைகளைப் பாராட்டியதுடன் லஞ்சம் ஊழல் பொது சேவை உத்தியோகஸ்தரிடையே இருப்பதாகவும் குறிப்பிட்டார். மத்திய [illegible] தொகுதி அங்கத்தவர் திரு எம். டி. பண்டா இத்தீர்மானத்தை அனுமோதித்துப் பேசுகையில் இலங்கையின் சுதந்திரத்துக்காக கண்டி மக்கள் பாடுபட்டு வந்தனரென்றும், அந்நிய நாட்டவர் கண்டிப் பகுதியில் படையெடுத்து வந்தபோது அவர்களை மக்கள் [illegible] விட்டு, இலங்கை இரத்தம் சிந்தாது சுதந்திரம் பெற்றுவிட்டதென்றும் இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்த தொடர்புகள் பலமானதாகக் காட்டப்பட வேண்டுமென்றும் இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப் பாடுபடவேண்டுமென்றும் கூட்டுறவு இயக்க அபிவிருத்தி, பொருள் கொள்வனவு இலாகா அபிவிருத்தி மூலம் உற்பத்தியாளருக்கு நன்மைகளைச் செய்தல் கிராமவாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் முதலியன பற்றி கூறினார். தொடர்ந்து பேசுகையில் விவசாயிகள் முன்னேற்ற விஷயங்கள், அரசாங்க உத்தியோகஸ்தர் நிலைமை பற்றியும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கடுகண்ணாவை தொகுதி அங்கத்தவர் திரு ஈ. எச். நுகவெல சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்கும்படி ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். இத்தீர்மானம் நிறைவேறியபின் சபை நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது. சபை இன்று பகல் 2 மணிக்கு கூடும்.

இந்தோனேஷியா

குடியரசு சர்க்காருக்கு பர்மாவின் அங்கீகாரம்

பட்டேவியா, நவ 24

இந்தோனேஷியக் குடியரசை பர்மா அரசாங்கம் நடைமுறையில் அங்கீகாரம் செய்துவிட்டதாக "ஜோக்ஜகர்த்தாவில்" இருந்து வந்த ஒரு ரேடியோச் செய்தி கூறுகின்றது.

குடியரசின் பாகிஸ்தான் பிரதிநிதி

குடியரசின் சார்பில் பாகிஸ்தான் பிரதிநிதியாக பழைய தபால் இலாகா மந்திரியான முகம்மது நட்ஸியான் நியமிக்கப்படுவார் என்று குடியரசுப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

குடியரசுக்கு ஆதரவு தரும் அவுஸ்திரேலியத் தொழிலாளர்

சிட்னி நவ 24

அவுஸ்திரேலிய துறைமுகத் தொழிலாளர் டச்சு அரசாங்கத் தேவைக்காக ஹாங்காங் செல்லவிருந்த பொருட்களை ஏற்றுமதி செய்ய மறுத்துவிட்டனர். இது [illegible] பிரிட்டிஷ் கப்பலில் செல்லவிருந்தது. இத்தொழிலாளர் டச்சு அரசாங்கத் தேவைக்கு ஆயுதம் ஏற்றுமதி செய்வதை மறுத்துவிட்டொழித்து நீண்ட நாளாகின்றன.

டச்சுத் துருப்புகள் வாபஸ்பெற மாட்டா

பட்டேவியா, நவ. 24

இங்கிருக்கும் [illegible] டச்சுத் துருப்புகள் இந்தோனேஷியாவிலிருந்து வெளியேற மாட்டாது என்று கிழக்கிந்திய டச்சு அரசாங்கம் கூறியுள்ளது. டச்சுத் துருப்புகள் சொந்த ஊர் திரும்ப முடியாத இந்த நிலைமையால் மிக அதிருப்தியடைந்துள்ளன.

இந்தோனேஷியாவுக்கு டொமினியன் அந்தஸ்து?

இந்தோனேஷியாவுக்கு டச்சு சர்க்கார் டொமினியன் அந்தஸ்து தரக்கூடும் என்று ஓர் செய்தி வெளியாகியது. ஆனால் ஹாலந்துத் தலைநகரான ஹேக்கில் இது மறுக்கப்பட்டது. 'அப்படி ஒன்றும் இடைபெறாது' எனவும் 'இந்தோனேஷியாவின் அரசியல் சீர்திருத்தம் டச்சு முடியாட்சியின் கீழ் இருக்கும்' என்றும் கூறப்பட்டது. (ராய்ட்டர்)

இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் திறப்பு விழாக் காட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சி கூட்டம்

நேற்று முன்தினம் கவர்னர் நிகழ்த்த செய்தியைக் குறித்து ஆலோசனை செய்ய எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பாராளுமன்றம் கூடுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்னதாக கூடினர். கவர்னர் செய்தியில் சில பகுதிகள் எதிர்க்கட்சியை தாக்குவதாக இருக்கின்றனவென்றும் அது பாரபட்சமுள்ளதென்றும் சிலர் கருதினர்.

பாராளுமன்றத்தின் ஆரம்ப திறப்பு விழாவை பகிஷ்கரிக்கலாமென்று போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இறுதியாக போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியைச் சேர்ந்த 6 பிரதிநிதிகளும் [illegible] பாராளுமன்ற ஆரம்ப விழாக்கூட்டத்தை பகிஷ்கரித்தனர். மற்ற எதிர்க்கட்சிகளின் அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள்.

கவர்னரின் பாராளுமன்றத் திறப்பு விழாப் பிரசங்கம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி] [illegible]ந்துள்ளது. அதிக ஊக்கத்துடன் அதை மேலும் அபிவிருத்தி செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

மற்றுமோர் புதிய இலாகா ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது சமூக சேவை இலாகா. சமூக சேவைக் கமிஷன் அறிக்கையின் பிரகாரம் [illegible] ஆலோசனைப்படி [illegible] சமூக சேவை நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். அது சம்பந்தமான சட்டங்கள் கூடிய சீக்கிரம் கொண்டுவரப்படும். அச்சட்டங்களின்படி புதிய சமூகசேவா இலாகா நிர்வாகம் செய்யும்.

வேலையில்லாத் திண்டாட்டம்

வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கஷ்டமான பிரச்னைகளாக எப்பொழுதுமிருந்து வருகிறது. அதிலும் யுத்தத்திற்குப் பின் இப்பிரச்னை மிகவும் அதிகக் கஷ்டமுடையதாக ஆகிவிட்டது. இப்பிரச்னையால் எதிர்காலத்தில் அதிக சங்கடங்கள் ஏற்படாதவாறு நிலைமையை சமாளிக்கக்கூடிய அளவினதான அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்.

இலவசக் கல்வியும் தேச பாஷைகளும்

கல்விக் கொள்கை சம்பந்தமாக எனது அரசாங்கம் இலவசக் கல்வி முறையை அனுஷ்டிப்பதுடன் நமது பள்ளிக்கூடங்களில் தேச பாஷைகளின் மூலம் கல்வி போதிக்கவும் ஏற்பாடு செய்யும்.

சுகாதாரம்

சுகாதாரம் சம்பந்தமாக எனது அரசாங்கம், இப்பொழுதுள்ள வைத்திய சேவையை அபிவிருத்தி செய்ய உத்தேசித்திருக்கிறது. சமீபத்தில் கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆஸ்பத்திரிகளில் பெரிய தளவாடங்களையும் சிப்பந்திகளையும் வைத்து சரியான முறையில் அமைக்கும். பெரிய ஆஸ்பத்திரிகளில் இடவசதியில்லாமலும் போதிய சிப்பந்திகளில்லாமலுமிருக்கும் குறைகளை நிவர்த்தி செய்யும்.

வியாதிகள் வராதபடி தடுக்கவும் வியாதி வந்தபின் குணப்படுத்தவும் முறையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்.

வீட்டுவசதி தண்ணீர் வசதி

ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்தின் முக்கியமான கொள்கை வீட்டு வசதித் திட்டங்களையும் தண்ணீர் வசதித் திட்டங்களையும் அபிவிருத்தி செய்வதாகும். நகரங்கள் கிராமங்கள் அமைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென தனியாக ஒரு இலாகா ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த இலாகா பெரிய நகரங்களிலும் மற்ற நகரங்களிலும் கிராமங்களிலும் வீட்டு வசதித் திட்டங்களையும் தண்ணீர் வசதித் திட்டங்களையும் அமுல் நடத்தும்.

மின்சாரத் திட்டம்

போக்குவரத்து, மராமத்து இலாகா மந்திரி மின்சாரத் திட்ட அபிவிருத்தியில் மிக ஊக்கமாகக் கவனம் செலுத்துவார். கூடிய சீக்கிரம் தளவாடங்கள் வந்து சேர்ந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுவதால் இத்திட்டத்தின் கால அட்டவணையின்படி முதலாவது கட்டம் கூடிய சீக்கிரம் நிறைவேற்றப்படும்.

வர்த்தகம்

டாலர் பரிவர்த்தனை, ஸ்டெர்லிங் நிதி, சர்வதேச நாணய நிதி முதலியவைகளால் ஏற்பட்டுள்ள பிரச்னைகளின் காரணமாக நாட்டின் வர்த்தகமும் தொழில்களும் பெரிதும் சிக்கலான நிலைமைக்குள்ளாகியிருக்கின்றன. எதிர்காலம் சங்கடமானதாக இருக்குமென்ற போதிலும், இலங்கையின் விளைபொருட்களுக்கு உலக மார்க்கெட்டுகளில் கூடியவரை நல்ல விலை கிடைக்கும்படி செய்ய எனது அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளும். சமூகப் பொருட்களுக்குச் செய்யப்படும் செலவுகளைக் குறைக்கவும் முயற்சிக்கப்படும். சரியான வழியாக இத்தருணத்தில் மார்க்கெட்டுகளின் கட்டுப்பாடுகள் சம்பந்தமாகவும், விலை வாசிகளை நிர்ணயிப்பதிலும், வரி சலுகைகள் சம்பந்தமாகவும் இதர நாடுகளுடன் இலங்கை வர்த்தக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும்.

[illegible] போக்குவரத்து தபால் மந்திரி, தந்தி தபால் வசதிகளை அதிகரிக்கவும் அபிவிருத்தி செய்யவும் விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்.

மசோதாக்கள்

பாராளுமன்றத்தின் இந்தக் கூட்டத்தொடரிலேயே எனது அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றுவதற்கான மசோதாக்கள் உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும். அரசாங்க ஊழியர்கள் தொழிற் சங்கங்களை நிறுவி அவைகளைப் பதிவு செய்ய உரிமையளிக்கும் மசோதா கூடிய சீக்கிரம் சமர்ப்பிக்கப்படும். அடமானச் சட்ட கமிஷன் சம்பந்தமாக மசோதாக்கள் கொண்டுவரப்படும்.

அவசர காலங்களில் பொதுஜனப் பாதுகாப்பு, பொதுஜன ஒழுங்கை நிறுவுவதற்கு தற்பொழுது அவை சம்பந்தமாக இருந்துவரும் சட்டங்களைப் பரிசீலனை செய்து, பிரிட்டன் முதலிய ஜனநாயக நாடுகளிலுள்ள சட்டங்களுக்கேற்ப இலங்கையிலும் சட்டங்கள் செய்யவும் பழைய சட்டங்களுக்கு திருத்த மசோதாக்கள் கொண்டு வருவார்கள்.

மற்றுமுள்ள மசோதாக்களும் நடவடிக்கைகளும் காலத்துக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும்.

நான் மேற்கூறிய விஷயங்களையெல்லாம் தவிர முந்திய அரசாங்க சபையில் கொண்டுவரப்பட்டு போதிய காலமில்லாததால் கைவிடப்பட்ட அடமான மசோதாவும் உங்களது ஆலோசனைக்கு சமர்ப்பிக்கப்படும்.

சுகாதார, ஸ்தலஸ்தாபன மந்திரி பல மசோதாக்களைத் தயாரித்து வைத்திருக்கிறார். அவைகள் உங்கள் முன்பு சமர்ப்பிக்கப்படும். அவைகளில் சில பிரத்தியேக ஆஸ்பத்திரிகள் வைத்திய விடுதிகள், மருத்துவ தாதிகள் பதிவு மசோதா, உணவு, மருந்து வகைகள், கட்டுப்பாடு மசோதா, மாகாண சபைகள் [illegible] மசோதா; வீட்டு வாடகைக் கட்டுப்பாடு மசோதா.

போக்குவரத்து, மராமத்து இலாகா மந்திரி, துறைமுக நிர்வாகம், மின்சாரம், போக்குவரத்து முதலியவை உங்களுடைய தீர்க்கமான ஆலோசனைக்குக் கொண்டு வருகிறார். உங்கள் நடவடிக்கைகளெல்லாம் ஆண்டவன் வழிகாட்டுவார் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்.

ஜப்பானில் இரகசியப் புரட்சியா?

இல்லையென ஜப்பானிய மந்திரி கூறுகிறார்

டோக்கியோ, நவ 24

ஜப்பானில் ஒரு 'இரகசிய அரசாங்கம்' [illegible] 10 லட்ச [illegible] எந்த வேளையிலும் அது அரசாங்கத்தின்மீது பாய [illegible] மக்ஆர்தர் காரியாலயத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் குறிப்பிட்டனர்.

'அவ்விதமான நிலைமை ஜப்பானில் இல்லை' என்று ஜப்பானிய சட்டசபையில் ஜப்பானிய மந்திரி கட்டயாமா இன்று கூறிவிட்டார். (ராய்ட்டர்)

எகிப்தில் இராணுவக் கலகமா?

செய்திகளுக்கு சர்க்கார் இருட்டடிப்பு

கெய்ரோ, நவ 25

எகிப்திய இராணுவத்தில் கலகம் ஒன்று நடத்துவதற்கு [illegible] செய்யப்பட்டிருந்ததாக தெரிய வந்துள்ளது. இது சம்பந்தமாக எவ்வித தகவலும் பிரசுரிக்கக்கூடாது என எகிப்திய சர்க்கார் தடை விதித்துள்ளார். அத்துடன் நாடெங்கும் விசாரணை நடத்தி வருவதோடு பாராளுமன்றக் கட்டிடத்தைச் சுற்றிக் காவலும் பலமாக ஏற்படுத்தியிருக்கிறது (ராய்ட்டர்)

கோரம் இன்றி கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

மட்டக்களப்பு, நவ 25

மட்டக்களப்பு அர்பன் சபையின் கூட்டத்துக்கு போதிய அங்கத்தினர் சமுகமளிக்காததால் கூட்ட நடவடிக்கை ஒத்திவைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் எடுக்கப்பட இருந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
புதிய இயந்திர அமைப்புகளுடன் இன்று ஆரம்பம்!
தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும். சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம் காண்பிக்கப்படும்.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என் எஸ் கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் இறம்பட நடித்தது

பிரிட்டிஷ் சகாப்தம் முடிவு

இனி ஆப்பிரிக்காவே பிரிட்டனுக்குக் கதி!

நியூயார்க், நவ. 24

நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் லண்டன் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:-

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லையென்ற பெருமையை அடைந்திருந்த காலம் மலையேறிவிட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்ய சூரியன் அஸ்தமித்துவிட்டது. உலகில் பிரிட்டிஷ் சகாப்தம் முடிந்துவிட்டது. பிரிட்டன் தனது சாம்ராஜ்ய நாடுகளுடனும் ஏனைய சுதந்திர நாடுகளுடனும் நடந்துகொள்வது போலவே இனி நடந்துகொள்ள முடியும். அவைகளிடம் பிரிட்டன் இனி அதிகாரம் செலுத்த முடியாது. இனி பிரிட்டனுக்கு ஆப்பிரிக்காவிலுள்ள குடியேற்ற நாடுகள்தான் கதி.

இப்பொழுது இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மாவும், இன்னும் சிலகாலத்தில் மலாயாவும், கனடா, ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, தென்னாபிரிக்கா, அயர்லந்து போன்ற டொமினியன்கள் ஆவதால் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அழிந்துவிட்டதென்று சொல்ல முடியாதென்றாலும் பிரிட்டன் தன் அதிகாரத்தைச் செலுத்த முடியாத சாம்ராஜ்யமாக மாறிவிட்டதென்று சொல்லலாம்.

சாம்ராஜ்ய மந்திராலோசனை

லண்டன், நவ. 24

இன்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி காரியாலயத்தில் சாம்ராஜ்ய மந்திராலோசனை நடைபெற்றது. பிரிட்டிஷ் மந்திரி சபையுடன் இளவரசி கலியாணத்திற்காக இங்கு வந்த கானடா பிரதம மந்திரியும், தென்னாப்பிரிக்கா பிரதம மந்திரியும் சந்தித்துப் பேசினார்கள். அவர்களுடன் கானடா, அவுஸ்திரேலியா, நியூஜிலந்து, தென்னாப்பிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான் ஹை கமிஷனர்களும் பேச்சில் கலந்துகொண்டனர். முக்கியமாக சர்வதேச உறவுகள் பற்றியே சம்பாஷணை நடைபெற்றது. (ராய்ட்டர்)

கம்பஹா, நவ 25

கிராண்ட்பாசைச் சேர்ந்த வர்ணகுலசூரியா சைமன் பீட்டர் பெர்னாண்டோ என்பவர் இரகசியப் போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித்து ஒருவரை ஏமாற்றி பணம் வாங்க முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டுக் கொண்டுவரப்பட்ட வழக்கில் கம்பஹா மாஜிஸ்ட்ரேட் எதிரிக்கு 6 மாதச் சிறைத்தண்டனை விதித்தார்.

சமரசம், பரஸ்பர நம்பிக்கை

ஆசியாவின் புதிய சகாப்தம்

ஆசிய பொருளாதார கமிஷன் கூட்டத்தை சீனப் பிரதிநிதி ஆரம்பித்து வைத்தார்.

மணிலா, நவ. 24

இன்று ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் ஆசியா பொருளாதாரக் கமிஷன் கூட்டத்தை பகுவை நகரில் சீனப் பிரதிநிதி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பின்வருமாறு தெரிவித்தார்:- ஒரு நாட்டின் ஏழ்மையிலிருந்து மற்றொரு நாடு லாபமடைய முடியாது. எல்லா நாடுகளும் சுபீட்சமாக இருந்தால்தான் ஒவ்வொரு நாட்டுக்கும் நலனுண்டு. ஆசிய மக்கள் இப்பொழுது கைத்தொழில் [illegible] சகாப்தத்தில் இறங்கியிருக்கிறார்கள். இதற்கு இரு விஷயங்கள் சாதகமாக இருக்கின்றன. ஆசிய மக்களும் விஞ்ஞான, தொழில் நுட்ப அறிவு பெற்றுவிட்டனர். எல்லா நாடுகளும் சுபீட்சமாக இருந்தால்தான் தங்களுக்கு நன்மை உண்டு என்பதை ஒவ்வொரு நாடும் உணர்ந்து விட்டது. 19-வது நூற்றாண்டு குடியேற்றச் சுரண்டல் கொள்கை குழி தோண்டி புதைக்கப்பட்டு விட்டது. உலகில் புதிய உணர்ச்சி தோன்றியிருப்பதற்கு இந்தியாவும், பிலிப்பைனும் சுதந்திரமடைந்திருப்பதே உதாரணமாகும். இந்த இருபதாவது நூற்றாண்டில் எல்லா நாடுகளும் சமத்துவ அந்தஸ்தும் பரஸ்பர நம்பிக்கையுமுடையனவாக இருந்தால்தான் ஒத்துழைத்து வாழ முடியும்.

இக்கூட்டத்திற்கு இந்தியா, சைனா, பிரிட்டன், ரஷியா, அமெரிக்கா, சயாம, ஹாலந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பிலிப்பைன் முதலிய நாடுகளின் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள். (ராய்ட்டர்)

ரயில் பிரயாண வசதிகள்

டீஸல் ரயில்களை ஏற்படுத்தும்படி தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாண அர்பன் சபையின் வெள்ளிக்கிழமை 28-ம் தேதி கூட்டத்தில் திரு ஆர். வி. மன்மதராஜா கொண்டுவந்த ஒரு தீர்மானத்தில் காங்கேசன்துறை-பலாலி ரயில் பிரயாணத்துக்கு புதிதாக வந்துள்ள டீஸல் ரயில்கள் சில வழங்கப்படவேண்டுமென்றும் கொழும்பு-காங்கேசன்துறை பிரயாணத்துக்கும் டீஸல் ரயில்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் போக்குவரத்து மந்திரியைக் கேட்டுக்கொள்வதாக இரு தீர்மானங்கள் கொண்டுவருவார்.

சந்திரா பீடி
CHANDRA BEEDI
M.R. SIVARAM & CO.,
604, B, NEW TOWN MADAMPE.
C.A.P.Co.

பாலஸ்தீனமும் பிரிட்டனும்

சோவியத் ரஷியா கண்டனம்

நியூயார்க், நவ 24

ஐக்கிய தேச பாலஸ்தீன கமிட்டியில் சோவியத் பிரதிநிதி பிரிட்டனை பலமாகக் கண்டித்து பின்வருமாறு பேசினார்:- ஐக்கிய தேச கொள்கையை மதித்து பாலஸ்தீன பிரச்னையைத் தீர்க்க பிரிட்டன் சரிவர நடந்துகொள்ளவில்லை. ஆதலால் கமிட்டியில் பிரிட்டன் தெரிவித்த அபிப்பிராயங்களையெல்லாம் நாம் உதறித் தள்ள வேண்டும்.

பாலஸ்தீனம் பிரிக்கப்பட்டால் யூதர்கள் இரத்தம் ஆறாகப் பெருக்கெடுத்தோடுமென எகிப்திய பிரதிநிதி எச்சரித்தார்.

யூத மத குரு விண்ணப்பம்

ஜெரூஸலேம், நவ 24

பாலஸ்தீன பிரிவினைக்கு ஐக்கிய தேச பொதுச் சபையில் மூன்றில் இரு பங்கு ஆதரவு வோட்டுகள் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்யும்படி யூத மத குரு உலக யூதர்களுக்கு ஓர் விண்ணப்பம் விடுத்துள்ளார். [ராய்ட்டர்]

கொழும்பு, நவ. 25

இ. மா செல்வராசன் கோட்டை ஷெடியூல்ட வகுப்பார் சம்மேளனக் கொழும்புக் கிளைச் சங்கத்தின் கூட்டம் திரு கே. எம். சுப்பையா தலைமையில் நடைபெற்றது. சங்க முன்னேற்றத்துக்கான பல விஷயங்கள் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டன.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 26உ இந்த பத்திரிகை 194A, தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.